DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : STC 125/2021
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அரிஹரன்@அரிஹரமகாதேவன் |
| Husband Name | ராமநாதன் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07/06/2023

**முதல் விசாரணை**

1.)நான் தற்போது சென்னையில் கோவிலம்பாக்கத்தில் வசித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணி செய்கிறேன். பட்டியல் சாட்சி சுவேதா எனது இளைய சகோதரிஆவார். சாட்சி ராமநாதன் எனது தந்தை ஆவார்.அவர் தற்போது உயிர் உடன் இல்லை. 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். கடந்த 17.07.2012 ம் தேதி சென்னை மடிப்பாக்கத்தில் இருந்து மதுரை செல்வதற்காக வீட்டில் இருந்து 4 மணிக்கு புறப்பட்டோம். TN 22 AR 6217 என்ற டாடா இன்டிகோ காரில் சென்றோம். காரில் நானும் எனது தந்தை ராமநாதன் தயார் ஜெயந்தி மற்றொரு இளையசகோதரி ஆனந்த வள்ளி மற்றும் சுவேதா ஆகியோர் சென்றோம். காரை எனது சகோதரி சுவேதா ஓட்டினார்.

2). கருங்குழி அருகே வரும் போது நாங்கள் வந்த கார் சாலையின் வலது பக்கத்தில் சென்டர் மீடியனை ஓட்டி சென்று கொண்டு இருந்தது எங்களுக்கு முன்னால் சென்ற அரசு பேருந்து அந்த பேருந்துக்கு முன்னால் சென்ற லாரியை முந்தி செல்வதற்காக எவ்வித செய்கையும் செய்யாமல் முந்தி செல்ல முயன்ற போது பேருந்தின் பின் பக்க வலது பக்கம் எங்களது காரின் இடது பக்கத்தின் முன் பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டது.

3). சம்பவம் நடந்ததை நான் புகைப்படம் எடுத்தேன். எனது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டது. எனது தங்கை ஆனந்த வள்ளியின் மூன்று மாத கரு கலைந்துவிட்டது. விபத்து சம்பவமாக எனது தந்தை சுவேதா மதுராந்தகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காயம்பட்டவருக்கு மதுராந்தகத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

4). எனது தங்கை சுவேதா வழக்கறிஞராக பணிபுரிக்கிறார். நாங்கள் சென்ற காரில் ஐந்து நபர்கள் பயணம் செய்தோம். சுவேதா காரை ஓட்டினார் அவருக்கு பக்கத்தில் நான் முன் சீட்டில் அமர்ந்து இருந்தேன். எனது பெற்றோரும் ஆனந்தவள்ளியும் பின் சீட்டில் அமர்ந்து இருந்தார்கள். நான் தான் காரை ஓட்டினேன் என்றால் இல்லை. ராகவேந்திரா கோவில் பக்கம் இருந்து ஒரு மாடு திமீர் என்று சாலையை கடக்க முற்பட்ட போது அந்த மாட்டின் மீது மோதமல் இருப்பதற்காக பயணிகளை இறக்கிவிட்டு கொண்டு இருந்த பேருந்தின் பின் பகுதியில் நான் தான் மோதினேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லை.

5)எனக்கு வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் இல்லை என்பதால் காரை எனது தங்கை ஓட்டியதாக பொய்யான புகார் அளித்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எந்த தேதியில் எந்த இடத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விபத்து நடந்த 10 நாட்களுக்குள் விசாரணை செய்தார்கள் தேதி ஞாபகமில்லை. விபத்து காப்பீடு பெறுவதற்காக எனது தங்கை மூலம் பொய்யான புகார் அளித்துவிட்டு அதற்காக நீதிமன்றத்தில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது இளைய சகோதரி ஆனந்த வள்ளி விபத்து நடந்த சமயத்தில் மூன்று மாதம் கருவுற்று இருந்தார் என்று வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன் என்றாலும் உண்மையாக இருந்தால் புகாரில் அந்த விவரம் சொல்லப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல.